8th April 1958]

Police dog

* 623 *Q.*—Sri K. RAMACHANDRAN and Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Police dogs maintained by the Police Department;

(*b*) the number of cases in which the dogs have been employed in 1956 and 1957 ; and

(*c*) the number of cases detected through these dogs?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Six dogs and three pups.

(*b*) Three hundred and eleven cases in 1956 and 97 cases in 1957.

(*c*) Fifty-three cases in 1956 and 21 cases in 1957.

Sri K. RAMACHANDRAN: இந்த நாய்களை எந்தெந்த கேஸ்களுக்குத் தான் உபயோகிக்கவேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறதா ? அந்த விதிகளின்படி இந்த நாய்களை உபயோகிக்கப்பட்டு வருகிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எல்லாவிதமான கேஸ் களுக்கும் புலன் விசாரிப்பதற்காக இந்த நாய்களை உபயோகிக்கப்பட்டு வருகிறது. முக்கியமாக களவு, கன்னம், கொலை இது சம்பந்தப்பட்ட கேஸ்களில் புலன் விசாரிப்பதற்கு கஷ்டங்கள் ஏற்பட்டால் இந்த நாய்களை உபயோகிக்கப்படுகிறது.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : As these dogs are very useful, may I know whether there is any proposal to extend their service to the other districts also?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no such proposal to extend the scheme; but I may inform the hon. Member that these dogs can be easily transported either by train or by air wherever they are needed within this State.

Sri A. VEDARATHNAM : இந்த நாய்கள் இருப்பதால் லஞ்சம், 'கன்காக்ஷன்' போன்ற குற்றச்சாட்டுகளுக்கு இடமில்லாமல் சிறந்த முறை யில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிற காரணத்தால் இந்த நாய்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் முன்வருமா ? இன்னும் அதிக மான நாய்களுக்கு பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது நாய்களை அதிகரிக்க வேண்டுமென்ற யோசனை அரசாங்கத்திடம் இல்லை. இருப்பது போதுமென்றே நினைக்கிறோம்.

Sri K. ANBAZHAGAN : இந்த நாய்களுக்கு 'போலீஸ் நாய்' என்று பெயர் வைத்திருப்பது, ஏற்கெனவே அந்தத் தொடரை வழங்கியதன் காரணமாக தவறான பொருளை நினைவூட்டுவதாக இருப்பதால், 'துப்பறியும் நாய்' என்றபெயரை இட அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கலாம். அப்படி பெயரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.